[1983 மார்ச் 7

சிவகாசியில் தொழிலாளர் நல மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண். 308—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசியில் 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நல மருத்துவமனை எப்போது துவங்கப்படும் ?

(ஆ) அதற்கான மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எந்த ஆண்டில் மருத்துவமனை கட்டி முடிக்கப்படும் ?

(ஈ) பூர்வாங்க வேலைகள் உடன் துவங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ—இ) 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை ஒன்று கட்டுவதற்காக சிவகாசி அருகில் சாத்தூர் வட்டம் அணையூர் கிராமத்தில் 2.90 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி, பொதுப்பணித்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது, பொதுப்பணித்துறை மருத்துவமனை கட்டிடம் கட்ட 83.765 லட்ச ருபாய்க்காக மதிப்பீடும் பணியாளர் குடியிருப்பு சலவை நிலையம், மிதி வண்டி நிறுத்துமிடம் முதலியவற்றிற்காக 41.30 லட்ச ரூபாய்க்கான மதிப்பீடும் அனுப்பியுள்ளது. இந்த இரண்டு மதிப்பீடுகளும் புது டில்லியிலுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு இருக்கின்றன. அக்கழகத்தின் ஒப்புதல் கிடைத்தவுடன் கட்டுமான பணிகள் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு கூடிய விரைவில் கட்டிடங்கள் முடிக்கப்படும்.

தூத்துக்குடி நகருக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

*வினா எண். 309—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி நகரத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?